| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | | |
| மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **14/02/2024** | முதல் | **18/02/2024** | |
| அறிக்கை எண் : | **013/ 2024** | வெளியீட்டு நாள் : | | **13/02/2024** | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22° - 23° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை** (08.02.2024 **முதல்** 12.02.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –18-02-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 08/02 | 09/02 | 10/02 | 11/02 | 12/02 | தேதி | நாள்-1 14/02 | நாள்-2 15/02 | நாள்-3 16/02 | நாள்-4 17/02 | நாள்-5 18/02 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 0 | 0 | 0 | 0 |
| 35 | 36 | 34 | 34 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 34 | 34 | 33 | 34 |
| 21 | 22 | 22 | 23 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 24 | 24 | 23 | 23 |
| 2 | 2 | 3 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 4 | 4 | 2 | 2 |
| 82 | 88 | 81 | 86 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 80 | 90 | 90 |
| 37 | 47 | 43 | 44 | 45 | | 50 | 50 | 40 | 50 | 50 |
| 9 | 9 | 12 | 12 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 18 | 16 | 16 | 20 | 20 |
| கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் பிப்ரவரி 14 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 33°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23°-24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 16 முதல் 20 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

14ம் தேதியன்று மாவட்டத்தில் ஒரிரு இடங்களில் மிக லேசான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாலும் அதனை தொடர்ந்து வரும் 4 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளதாலும், விவசாயிகள் உங்கள் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும். அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவ வாய்ப்புள்ளதால், உங்கள் கால்நடைகளை சூரிய உதயத்திற்கு 2 மணி நேரத்திற்குப் பிறகு மட்டுமே மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 16 முதல் 20 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என

நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (16 முதல் 22 பிப்ரவரி 2024):**

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் இயல்பை விட குறைந்தது முதல் இயல்பை ஒட்டிய லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது

**அதிகபட்ச வெப்பநிலை :**

16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும்.18° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : வெண்டை, நிலக்கடலை, கால்நடை**

**வெண்டை:**

வெண்டை பயிரைத் தாக்கும் செந்நாவாய்ப் பூச்சியின் தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இதன் காரணமாக தாக்கப்பட்ட காய்களின் விதைகள் நிறம் மாறியும், சுருங்கியும் காணப்படும்.

தாக்கப்பட் வயல்களில் ஹார்பேக்டர் காஸ்டாலிஸ் என்ற இறை விழுங்கிகளை விட்டு செந்நாவாய்ப் பூச்சியை கட்டுப்படுத்தலாம்.

மேலும் ஒரு ஏக்கருக்கு 600 மில்லி என்ற அளவில் பிவேரியாபேசியானா தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.

**நிலக்கடலை:**

நிலக்கடலையில் மொட்டுக் கருகல் வைரஸ் நோய் தாக்குதல் தென்படுகின்றது. இளம் இலைகளில் வெளிர் பச்சை நிறத்தில் வளையப் புள்ளிகள் தோன்றி பின் நுனியில் மொட்டுக் கருகல் ஏற்படுகின்றது.

செடிகள் முதிர்ச்சியடையும் போது சிறிய இடைக்கணுவுடன் மொட்டுக்கள் தோன்றி வளர்ச்சி குன்றியும் காணப்படும். இவ்வகையான நோய்கள் இலைப் பேன் மூலம் பரவுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் வெர்டிசீலியம் லக்கானி மற்றும் 10

பயிரையும் சேர்த்து விதைக்கலாம்.

விதைத்ததிலிருந்து ஆறு வாரங்களுக்கு பாதிக்கப்பட்ட செடிகளை கண்காணித்து அகற்றி விடவும்

**கால்நடை:**

தற்போது நிலவும் வானிலையில் மாடுகளை அடைப்பான் நோய் தாக்க வாய்ப்பு உள்ளது. இந்நோய் தாக்கப்பட்ட மாடுகளுக்கு காய்ச்சல் இருக்கும். மாடுகளில் உணர்வு இழப்பு ஏற்பட்டு பிறகு இறந்து விடும்.

இறந்தவுடன் மூக்கு, வாய், ஆசனம் போன்றவற்றிலிருந்து கருமை நிறமான இரத்தம் வெளியேறும்.

இந்நோயில் இருந்து தங்கள் கால்நடைகளைக் காப்பாற்ற வருடத்திற்கு ஒரு முறை அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி அடைப்பான் நோய்க்கான தடுப்பூசிகளை போட வேண்டும்.